14056

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

42 | T | I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024 (2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024 (2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024 (2025)

කර්ණාටක සංගීතය I, II
கர்நாடக சங்கீதம் I, II
Carnatic Music I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## கர்நாடக சங்கீதம் I

**அறிவுறுத்தல்கள் :**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் நீங்கள் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** பல இராகங்களை தன்னகத்தே கொண்ட உருப்படி
(1) இராகமாலிகை (2) இலட்சண கீதம் (3) ஜதிஸ்வரம் (4) சூளாதி

**2.** குறிஞ்சி ராகம் ஓர்
(1) வக்ரராகம் (2) நிஷாதாந்திய ராகம்
(3) பஞ்சமாந்திய ராகம் (4) தைவதாந்திய இராகம்

**3.** பின்வரும் பாடல் வகைகளுள் திருவாசகப் பகுதியைச் சேர்ந்தது
(1) திருப்புராணம் (2) திருச்சாழல் (3) திருப்பாவை (4) திருத்தாண்டகம்

**4.** சதுஸ்ரஜாதி துருவதாளத்தின் மொத்த அட்சர எண்ணிக்கைக்கு சமமான தாளம்
(1) கண்ட அட (2) மிஸ்ர மட்டியம் (3) மிஸ்ர திரிபுடை (4) சங்கீர்ண திரிபுடை

**5.** கர்நாடக இசையில் தனியிசைக் கச்சேரிகளில் வாசிக்கப்படும் பிரதான தாளவாத்தியம்
(1) கஞ்சிரா (2) கடம் (3) மிருதங்கம் (4) முகர்சிங்

**6.** திருப்பல்லாண்டு பாடப்படும் இராகமும் அருளியவரும் முறையே
(1) மத்யமாவதி, சேக்கிழார் (2) ஆனந்த பைரவி, காரைக்காலம்மையார்
(3) ஆனந்த பைரவி, சேந்தனார் (4) மோகனம், மாணிக்கவாசகர்

**7.** முத்துத்தாண்டவர் சிதம்பரத்தில் பேரொளிப்பிழம்பில் கலந்தபோது பாடிய பாடல்
(1) "பூலோக கைலாசகிரி புவி சிதம்பரம்..."
(2) "மாணிக்க வாசகர் பேறெனக்குத்தரவல்லாயோ..."
(3) "காணாமல் வீணிலே காலம்..."
(4) "தரிசனம் செய்வேனே..."

**8.** "சின்னஞ்சிறு கிளியே..." என்னும் இராகமாலிகையில் இடம்பெறும் பஞ்சமவர்ஜ இராகம்
(1) வசந்தா (2) நீலமணி (3) மாண்டு (4) காபி

**9.** பின்வரும் சரித்திரங்களுள் கோபாலகிருஷ்ண பாரதியாரால் பாடப்பட்டவை
(1) இயற்பகை நாயனார் சரித்திரம், திருநீலகண்ட நாயனார் சரித்திரம்
(2) நந்தனார் சரித்திரம், கண்ணப்ப நாயனார் சரித்திரம்
(3) காரைக்கால் அம்மையார் சரித்திரம், சேந்தனார் சரித்திரம்
(4) நந்தனார் சரித்திரம், சேக்கிழார் சரித்திரம்

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka



**10.** மேளகர்த்தா இராகங்களுக்கான சங்கேதாட்சர முறையை ஏற்படுத்தியவர்
(1) புரந்தரதாசர் (2) இராமாமாத்யர் (3) வேங்கடமகி (4) சாரங்கதேவர்

**11.** ஸ்வரமேளகலாநிதியில் குறிப்பிடப்படும் மேளங்களின் எண்ணிக்கை
(1) 18 (2) 20 (3) 36 (4) 72

**12.** "ஹ்ரஸ்வ ஸ்வரம்" எனப்படுவது,
(1) குறில் ஸ்வரம் (2) நெடில் ஸ்வரம் (3) தீவிர ஸ்வரம் (4) சுத்த ஸ்வரம்

**13.** மத்யமாவதி இராகத்தில் அமைந்த "சிவபெருமானே..." எனும் சஞ்சாரி கீதத்தில் பரிபம | நிப | நீ || எனும் ஸ்வரப் பகுதிக்குரிய சாஹித்யம்
(1) உமை மணவாளா (2) அமரர் பணியும் (3) வருவாய் அருளே (4) பாவார் பொருளே

**14.** கீர்த்தனைகளில் சங்கதி பாடும் முறையினை நிர்ணயித்தவர்
(1) சியாமா சாஸ்திரிகள் (2) முத்துத் தாண்டவர்
(3) தியாகராஜ ஸ்வாமிகள் (4) முத்துஸ்வாமி தீக்ஷிதர்

**15.** வீணை வாத்தியத்தில், வாசிக்கும் தந்திகளுக்கு சுருதி கூட்டப்படும் ஒழுங்கு
(1) ஸ ப ஸ̣ ப̣ (2) ஸ ப̣ ஸ̣ ப̤ (3) ஸ ப ஸ ப (4) ஸ ப̣ ஸ ப̤

**16.** "மானினேர்விழி மாதராய்" என்னும் தேவாரம் அமைந்துள்ள தாளம்
(1) ஆதி (2) மிஸ்ர சாபு (3) கண்ட சாபு (4) ரூபகம்

**17.** ஆரோஹண அவரோஹணங்களில் ஸ்வரங்கள் கிரமமின்றி திரிந்து வருவது
(1) வக்ர ராகம் (2) உபாங்க ராகம் (3) பாஷாங்க ராகம் (4) வர்ஜ ராகம்

**18.** புல்லாங்குழல் வாத்தியத்தில் வாசிக்கப்படும் மிக உயர்ந்த சுருதியுடைய ஸ்வரத்தை உண்டாக்கும் துளை
(1) ஊதும்துளை (2) முகரந்திரம் (3) முத்திரைத்துளை (4) தாரரந்திரம்

**19.** நாரதரால் தியாகராஜ ஸ்வாமிகளுக்கு வழங்கப்பட்டதாக கூறப்படும் இசைநூல்
(1) ஸ்வரார்ணவமு (2) கானாம்ருதபோதினி
(3) ஸ்வரராகபோதினி (4) நாரதசிஷ்யா

**20.** பிரபந்தங்களின் அங்கங்களாகக் கருதப்பட்டவை
(1) உத்க்ருஹம், ஆரோஹி, த்ருவம், அவரோஹி
(2) உத்க்ருஹம், த்ருவம், மேளபாகம், ஆபோகம்
(3) பல்லவி, அனுபல்லவி, சரணம், சரண ஸ்வரங்கள்
(4) த்ருவம், ஆரோஹி, அவரோஹி, ஆபோகம்

**21.** அருணாசலக் கவிராயரால் இயற்றப்பட்ட நூல்
(1) ஹனுமார் பிள்ளைத்தமிழ் (2) நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள்
(3) திருவருட்பா (4) சூளாதி

**22.** "ர கி ம த நி" என்னும் ஸங்கேதாட்சரத்தினால் குறிப்பிடப்படும் இராகம்
(1) தோடி (2) கரஹரப்ரியா
(3) மாயாமாளவகௌளை (4) சங்கராபரணம்

**23.** "கா ; ரிஸரிகா ; ரிக மகாரி ஸா" எனும் ஸ்வரக் கோர்வையில் வரும் மொத்த அட்சரங்கள்
(1) 10 (2) 12 (3) 16 (4) 18

**24.** ஒரு வர்ணத்தின் அங்கங்கள் முறையே
(1) பல்லவி, அனுபல்லவி, எத்துக்கடைப்பல்லவி, முத்தாயிஸ்வரம், சரணம்
(2) பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரம், சரணம், சரண ஸ்வரங்கள்
(3) பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரம், சரணம், எத்துக்கடைப்பல்லவி
(4) பல்லவி, அனுபல்லவி, சரணம், முத்தாயிஸ்வரம், சரண ஸ்வரங்கள்

[பக். 3 ஐப் பார்க்க

**25.** ஸரிகபதஸ - ஸ்நிதபமகரிஸ என்னும் ஆரோகண அவரோஹணத்தையுடைய ராகம்
(1) பிலஹரி (2) மோஹனம் (3) ஆனந்த பைரவி (4) மத்யமாவதி

**26.** சங்கீதவித்தை தழைத்தோங்க தியாகராஜர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கற்றல் முறை
(1) குருகுலவாச கற்றல் முறை (2) செயற்பாட்டுக் கற்றல் முறை
(3) தேடிக் கற்றல் முறை (4) சுயகற்றல் முறை

**27.** பின்வருவனவற்றுள் "பூர்வாங்கப் பகுதி" எனும் பிரிவினுள் அடங்குபவை
(1) 72 மேளகர்த்தா திட்டத்தில் 6, 7, 8, 9, 10 ஆவது சக்கரங்கள்
(2) அஸ்டகத்தில் ஸரிகமப ஆகிய ஸ்வரப்பகுதி
(3) ஒரு வர்ணத்தின் சரணமும் சிட்டைஸ்வரங்களும்
(4) ஒரு வர்ணத்தின் பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரம்

**28.** "அன்னமே" என்னும் ஆரபி ராக வர்ணத்தை இயற்றியவர்
(1) பல்லவி கோபாலய்யர் (2) பாபநாசம் சிவன்
(3) டைகர் வரதாச்சாரியார் (4) வீணை குப்பய்யர்

**29.** 72 மேளகர்த்தா திட்டத்தில் 5 ஆவது சக்கரத்தில் வரும் இரண்டு விவாதி மேளங்கள்
(1) மாரரஞ்சனி, ஹ. காம்போஜி (2) சாருகேஸி, ஸரஸாங்கி
(3) ஸரஸாங்கி, தீரசங்கராபரணம் (4) மாரரஞ்சனி, நாகாநந்தினி

**30.** தபா / ஸாரிக பமகம ரிகம ரீஸா
மேலே குறிப்பிடப்பட்ட ஸ்வரக் கோர்வையில் பயன்படுத்தப்பட்டுள்ள இதர குறியீடுகள் முறையே
(1) ஏற்றஜாரு, வளைவுகோடு, நட்சத்திரம், கமகம்
(2) இறக்கஜாரு, படுக்கைக் கோடு, நட்சத்திரம், கமகம்
(3) அங்கமுடிவு, வளைவுகோடு, நட்சத்திரம், இறக்கஜாரு
(4) இறக்கஜாரு, படுக்கைக்கோடு, நட்சத்திரம், கமகம்

**31.** வயலின் வாத்தியத்தில் வாசிக்கக்கூடிய ஸ்தாயி எல்லை
(1) $3\frac{1}{2}$ ஸ்தாயி முதல் 4 ஸ்தாயி வரை (2) $2\frac{1}{2}$ ஸ்தாயி முதல் $3\frac{1}{2}$ ஸ்தாயி வரை
(3) $3\frac{1}{2}$ ஸ்தாயி முதல் $4\frac{1}{2}$ ஸ்தாயி வரை (4) $7\frac{1}{2}$ ஸ்தாயி வரை

**32.** முத்துத் தாண்டவரால் இயற்றப்பட்ட தெய்வத்தின் புகழ்பாடும் கீர்த்தனைகள்
(1) நவரத்தினக் கீர்த்தனைகள் எனப்படும். (2) பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் எனப்படும்.
(3) பேரின்பப் பதங்கள் எனப்படும். (4) பிரபந்தங்கள் எனப்படும்.

**33.** ஒரே ஸ்தானத்தில் ஒலிக்கும் இரு வேறுபட்ட ஸ்வரப் பெயர்கள்
(1) ஷட்சுருதி ரிஷபம், சாதாரண காந்தாரம்
(2) சுத்த ரிஷபம், சுத்த காந்தாரம்
(3) காகலி நிஷாதம், ஷட்சுருதி தைவதம்
(4) சுத்த தைவதம், கைசிகி நிஷாதம்

**34.** பின்வருவனவற்றுள் மேலைத்தேய இசைக்கும் ஹிந்துஸ்தானி இசைக்கும் பொதுவான வாத்தியத்தொகுதி
(1) ஓகன், வயலின், கிளாரினட் (2) தபேலா, சித்தார், புல்லாங்குழல்
(3) ஸரோட், தபேலா, கிளாரினட் (4) புல்லாங்குழல், வயலின், கிளாரினட்

**35.** பல்லிய நிகழ்ச்சி ஒன்றின் ஒலிப்பதிவை கேட்கும்போது குறிப்பிட்ட ஒரு வாத்தியத்தை இனங்கண்டுகொள்ளக்கூடிய முக்கிய அம்சம்
(1) அவ்வாத்தியத்தில் வாசிக்கும் பாணி
(2) குறிப்பிட்ட அவ்வாத்தியத்தின் தனித்துவமான ஒலி
(3) அவ்வாத்தியத்தில் வாசிக்கப்படும் உருப்படிகள்
(4) அவ்வாத்தியத்தை இசைக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியான இன்ப உணர்வு

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

5. சியாமாசாஸ்திரிகளின் வாழ்க்கை வரலாற்றினையும் அவரது இசைப் பணிகளையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

- பிறந்த இடம், வருடம்
- இளமைக்காலம், கல்வி
- இயற்றிய கிருதிகள்
- உருப்படிகளின் நான்கு சிறப்பம்சங்கள்

6. நீர் கற்ற ஆதிதாள வர்ணம் ஒன்றின் உத்தராங்கப் பகுதியினை ஸ்வர, ஸாகித்திய, தாள அங்க அடையாளங்களுடன் எழுதுக.

7. இந்திய சங்கீதத்தில் பண்ணிசை பற்றிப் பின்வரும் வினாக்களுக்கு விடை அளிக்குக.
   (i) பண்ணிசையின் தோற்றம், வளர்ச்சி பற்றி விரிவாகத் தருக.
   (ii) உமக்குத் தெரிந்த பத்துப் பண்களுக்கு இணையான கர்நாடக இராகங்களைத் தருக.
   (iii) பாடப்படவேண்டிய கானகாலத்தைக் கொண்டு பண்களை வகைப்படுத்தி அவை ஒவ்வொன்றுக்கும் **இரண்டு** உதாரணங்கள் தருக.

**அல்லது**

இந்தியாவின் கர்நாடக இசை வரலாற்றில் 7 ஆம் 8 ஆம் நூற்றாண்டுகளின் கலாசாரப் பின்னணி பற்றி விரிவாக ஆராய்க.

* * *

Department of Examinations Sri Lanka
Department of Examinations - Sri Lanka